# சென்னை அடையாறு மண்டலத்தில் வார்டு-174க்குட்பட்ட பகுதிகளில் ரூ 78.39 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 பல்நோக்கு மைய கட்டிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்



**சென்னை,டிச.31**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், அடையாறு மண்டலத்தில் வார்டு-174க்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 78.39 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 பல்நோக்கு மையக் கட்டத்தினையும் மற்றும் உடற் பயிற்சிக் கூடத்தையும் (30.12.2025) திறந்து வைத்தார்.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.மா.சுப்பிரமணியன் சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-174க் குட்பட்ட வசந்தா பிரஸ் சாலையில், 174வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 9.62 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடம் மற்றும் பெசன்ட் நகர், 5வது அவென்யூவில் மாமன்ற உறுப்பினர் அவர்களின் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 16 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையம் கட்டடத்தினையும் திறந்து வைத்து இக்கட்டடங்களில் செயல்படும் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்குட்பட்ட அடையாறு-2, நியாய விலைக் கடை மற்றும் பெசன்ட் நகர் 4வது கடை குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்.இதனைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அமைச்சர் அவர்கள், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.அசன் மௌலானா அவர்களின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 42 லட்சம் மதிப்பீட்டில் வார்டு-174, பெசன்ட் நகர், 6வது அவன்யூவில் கட்டப்பட்ட நவீன உடற்பயிற்சி கூடத்தினைத் திறந்து வைத்துப் பார்வையிட்டு, உடற்பயிற்சி கூடத்தில் உள்ள உபகரணங்களை பயன்படுத்தி உடற்பயிற்சி மேற்கொண்டார்.

பின்னர், சாஸ்திரி நகர் 4வது சந்தில் 174வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூபாய் 10.77 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடம் திறந்து வைத்து, இக்கட்டடத்தில் செயல்படும் சாஸ்திரி நகர் 2வது நியாய விலைக் கடை குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ரூபாய் 275/- என குறைந்த விலையில் பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை, ஏலக்காய், பாசிப்பருப்பு மற்றும் நெய் அடங்கிய பொங்கல் தொகுப்பினை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அதாப் ரசூல், மண்டலக்குழுத் தலைவர்.ஆர்.துரைராஜ், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் பொது மேலாளர் திரு.தமிழ்வாணன், மாமன்ற உறுப்பினர் ம.ராதிகா, கூட்டுறவு சங்க அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அடையார் பகுதியில் வெளிநாட்டு மதுபாட்டில்களை பதுக்கிய இருவர் கைது

**சென்னை டிச 31-**

சென்னை, அடையார் மது விலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர்ருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காவல் குழுவினர் நேற்று முன் தினம் அடையார் கார்னெட் சந்திப்பில் கண்காணிப்பில் ஈடுபட்டு அங்கு கையில் பையுடன் நின்று கொண்டிருந்த நபரிடம் விசாரணை செய்து பையை சோதனை செய்த போது அவர் விற்பனைக்காக வெளிநாட்டு மதுபாட்டில்களை பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

**இருவர் கைது**

அதன் பேரில் அடையார் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் வழக்குப்பதிவு செய்து எதிரி 1.வீரமணிகண்டன், வ/48, மயிலாப்பூர், சென்னை என்பவரை கைது செய்தனர். மேலும் விசாரணையில் வீரமணிகண்டனுக்கு வெளிநாட்டு மதுபாட்டில்களை சப்ளை செய்த இளஞ்செழியன், என்பவரையும் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 34 வெளிநாட்டு மது பாட்டில்கள் மற்றும் 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி இளஞ்செழியன் வெளிநாட்டிலிருந்து வரும் நபர்களிடம் மதுபாட்டில்களை வாங்கி விற்பனை செய்து வந்ததும், மேற்படி இருவர் மீது ஏற்கனவே தலா ஒரு குற்ற வழக்கு உள்ளதும் தெரியவந்தது.விசாரணைக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# திரு.வி.க.நகர் பகுதியில் மனைவி மீது கொலைவெறி தாக்குதல்: கணவர் கைது

**சென்னை டிச 31-**

சென்னை, திரு.வி.க.நகர், பொன்னுசாமி நகர் 2 வது தெருவில் வசித்து வருபவர் நாகலட்சுமி, என்பவர் கணவர் விநாயகம் மற்றும் 2 பிள்ளைகளுடன் வாடகை வீட்டில் வசித்து வருவதாகவும், கணவர் விநாயகம் சந்தேகப்பட்டு அடிக்கடி தகராறு செய்து வருவதாகவும், இந்நிலையில் நேற்று முன் தினம் காலை, விநாயகம் குடித்துவிட்டு நாகலட்சுமியை அவதூறாக பேசி, கையால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்து தப்பிச்சென்றுள்ளார். காயமடைந்த நாகலட்சுமி வீட்டின் உரிமையாளர் உதவியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று, தாக்கி கொலை மிரட்டல் விடுத்த கணவர் மீது நடவடிக்கை எடுக்கும்படியும், கொடுத்த புகார் மீது திரு.வி.க.நகர் காவல் நிலையத்தில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் ஆகிய சட்டப்பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். திரு.வி.க.நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி விநாயகம், என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி விநாயகம் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# திருவல்லிக்கேணி பகுதியில் அரிசி கடை வியாபாரி மீது தாக்குதல்: 3பேர் கைது

**சென்னை டிச 31-**

சென்னை, திருவல்லிக்கேணியைச் சேர்ந்த பாபுராவ், என்பவர் சொந்தமாக அரிசி கடை வைத்து வியாபாரம் செய்து வருவதாகவும், பாபுராவ் நேற்று முன் தினம் இரவு அவரது நண்பர்களுடன் தி.நகர் பகுதியில் இருக்கும் தனியார் மது பாருக்கு சென்று மது அருந்திக் கொண்டிருந்த போது, அங்கு வந்திருந்த நவீன்குமார் மற்றும் அவரது 2 நண்பர்கள், பாபுராவிடம் வாய்தகராறு செய்து, தகாத வார்த்தைகளால் பேசி, பாபுராவை தாக்க முற்பட்ட போது, அங்கிருந்தவர்கள் விலக்கிவிட்டு அனைவரும் சென்றதாகவும், பின்னர் நவீன்குமாரின் நண்பர் பாபுராவை செல்போனில் அழைத்து, தைரியமாக இருந்தால் திருவல்லிக்கேணி பக்கம் வா என அழைத்ததாகவும், இதனால் பாபுராவ் நள்ளிரவு நவீன்குமார் கூறிய அண்ணா சாலை, மெட்ரோ டீ கடைக்கு அருகே சென்றதாகவும், அங்கிருந்த நவீன்குமார் மற்றும் அவரது 2 நண்பர்கள் பாபுராவை தகாத வார்த்தைகளால் பேசி, கையால் தாக்கியும், அருகேயிருந்த கட்டையை எடுத்து தாக்கியும் கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றதாகவும், பாதிக்கப்பட்ட பாபுராவ் என்பவர் D-1 திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். திருவல்லிக்கேணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 1.சச்சின், 2.நவீன்குமார், 3.ஜனார்த்தனன், ஆகிய மூவரை கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட 3 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் சிறையில் அடைத்தனர்.

# திருவொற்றியூர் பகுதியில் வாலிபரிடம் வழிப்ப்றியில் ஈடுப்பட்டவர் கைது

**சென்னை டிச31-**

சென்னை, திருவொற்றியூர், காலடிப்பேட்டை பகுதியில் வசித்து வரும் ராஜ்கமல், இரவு, திருவொற்றியூர், தேரடி மெட்ரோ ரயில் நிலையம் அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த தெரிந்த நபர்களான ரூபன் உட்பட இருவர், ராஜ்கமலை வழிமறித்து, மது அருந்த பணம் கேட்டதாகவும், ராஜ்கமல் பணம் தர மறுக்கவே, இருவரும் சேர்ந்து ராஜ்கமலை தகாத வார்த்தைகளால் பேசி, கையால் தாக்கியும், கீழே கிடந்த கல்லை எடுத்து தாக்கியும் கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றதாகவும், இரத்தக் காயமடைந்த ராஜ்கமல் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் நிலையில், ராஜ்கமல் கொடுத்த புகாரின்பேரில்,திருவொற்றியூர் காவல் நிலையத்தில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். திருவொற்றியூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி ரூபன், என்பவரை கைது செய்தனர். விசாரணையில் எதிரி ரூபன் மீது ஏற்கனவே 2 கொலைமுயற்சி, வழிப்பறி உட்பட 6 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி ரூபன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய மற்றொரு தலைமறைவு எதிரியை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

# மணலி சேக்காடு வட்டார நாடார் ஐக்கிய உறவின்முறை மகமை 60ம் ஆண்டு வைர விழா



**திருவொற்றியூர் டிச. 31**

மணலி சேக்காடு வட்டார நாடார் உறவின்முறை மகமை தருமபண்டு 60 ஆம் ஆண்டு வைர விழா தலைவர் வழக்கறிஞர் கே. சந்திரமோகன் தலைமையில் நாடார் மகாஜன சங்க சென்னை மண்டல தலைவர் மணலிஏ.தங்கம் முன்னிலையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் ஹரிகரன் வரவேற்றார். தினத்தந்தி அதிபர் சி. பாலசுப்பிரமணிய ஆதித்தனார் வாழ்த்து செய்தி அடங்கிய வைர விழா மலரை பெருந்தலைவர் மக்கள் கட்சி தலைவர் என்.ஆர். தனபாலன் மகாஜன சங்க இணைச் செயலாளர் ஏ.வி. எஸ் மாரிமுத்து ஆகியோர் வெளியிட்டு கல்வெட்டை திறந்து வைத்தனர்.

முதல் வைர விழா மலரை காப்பாளர் முன்னாள் கூடுதல் பதிவுத்துறை தலைவர் ஏ. ஆறுமுகநயினார் பெற்று கொண்டார். நாடார் சங்க தலைவர்கள் கரு மூ.சி.சின்னதுரை வி ஆனந்தராஜ் எஸ் எம் பாஸ்கர் ஏ டி சுப்பையா எம். காமாட்சி ஆர்.பி. மனோகரன் சிதம்பரம் ராஜேந்திரன் உட்பட 700க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். முடிவில் இளைஞர் அணி தலைவர் நவீன் நன்றி கூறினார்.

# வேலை செய்த நிறுவனத்தில் ரூ.47 லட்சம் கையாடல்: துபாயில் இருந்து சென்னை வந்த வாலிபரை காரில் கடத்தி தாக்குதல்

**சென்னை டிச 31-**

திருச்சி சுப்பிரமணியபுரம் பாரதியார் தெருவை சேர்ந்தவர் சரத்குமார் (29). இவர், துபாயில் வசித்து வரும் ஜெயமோகன் (38) என்பவர் நடத்தி வரும் மேன் பவர் ஏஜென்சி நிறுவனத்தில் கணக்காளராக கடந்த 7 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார்.

**கடத்தல்**

சரத்குமாருக்கு கடந்த 6 மாதங்களாக ஜெயமோகன் சம்பளம் கொடுக்கவில்லை, என கூறப்படுகிறது. இதனால் சரத்குமார் வேலை பார்த்த நிறுவனத்தின் வங்கி கணக்கில் இருந்து ரூ.47 லட்சத்தை தனது வங்கி கணக்கிற்கு மாற்றி கையாடல் செய்துவிட்டு தலைமறைவாகியுள்ளார். இதனால் நிறுவனத்தின் உரிமையாளர் ஜெயமோகன் துபாயில் சரத்குமார் பழகி வந்த கோவை சரவணம்பட்டியை சேர்ந்த காவியா (21) என்ற கிளப் டான்சர் தங்கியுள்ள இடத்திற்கு சென்று பார்த்துள்ளார். அங்கு கிளப் டான்சர் காவியா, சரத்குமாருடன் திருச்சி சென்றது தெரியவந்தது.உடனே ஜெயமோகன் அபுதாபியில் இருந்து விமானம் மூலம் கடந்த 26ம் தேதி திருச்சி வந்துள்ளார். ஆனால் சரத்குமார் மற்றும் அவரது தோழியான கிளப் டான்சருடன் சென்னைக்கு சென்றது தெரிந்தது. உடனே, ஜெயமோகன் சென்னை உள்ள தனது மைத்துனர் அருண் பாண்டியனுக்கு நடந்த சம்பவத்தை கூறி சரத்குமார் மற்றும் அவரது தோழியை பிடித்து வைக்கும்படி கூறியுள்ளார்.

அதன்படி கடந்த 26ம் தேதி அருண் பாண்டியன் தனது நண்பர்கள் 3 பேருடன் சென்று சென்னை விமான நிலையம் அருகே சரத்குமார் மற்றும் அவரது தோழியை பிடித்து காரில் ஏற்ற முயன்றனர்.அப்போது அருகில் இருந்த பொதுமக்கள் போலீசாருக்கு தகவல் அளித்தனர். அதன்படி மவுண்ட் காவல் நிலையத்தில் இருந்து எஸ்ஐ தலைமையில் விரைந்து வந்த போலீசார் காரில் ஏற்ற முயன்ற சரத்குமார் மற்றும் கிளப் டான்சரை மீட்டனர். பிறகு நடந்த சம்பவத்தை அருண்பாண்டியன் புகாராக அளித்தார். அப்போது இருதரப்பும் பணம் தகராறு நாங்களே பேசி தீர்த்துக்கொள்கிறோம் என்று காவல் நிலையத்தில் எழுதி கொடுத்துவிட்டு சென்றனர்.

ஆனால் அருண்பாண்டியன், சரத்குமார் தோழியுடன் வெளியே வந்த போது, மீண்டும் அவர்களை காரில் கடத்தி சாலிகிராமம் தனலட்சுமி நகரில் உள்ள ஒரு வீட்டில் அடைத்து வைத்து ரூ.47 லட்சத்தை கேட்டு தாக்கியுள்ளனர்.சாலிகிராமம் தனலட்சுமி நகரில் உள்ள திருத்தணிகை பேலஸ் விடுதியில் இருப்பது தெரியவந்தது. அங்கு சென்று கிளப் டான்சர், சரத்குமாரை மீட்டனர். இதுதொடர்பாக கடத்திய அருண் பாண்டியன் மற்றும் அவரது நண்பர்கள் 3 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆர்.கே. நகர் பகுதியில் மளிகைக்கடைகாரரை மிரட்டி பணம் பறித்த ஒருவர் கைது

**சென்னை டிச 31-**

சென்னை, கொருக்குப்பேட்டையைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன், என்பவர் கொருக்குப்பேட்டை, ஹரிநாராயணபுரம், முத்துமாரியம்மன் கோயில் தெருவில் மளிகைக்கடை நடத்தி வருவதாகவும், நேற்று முன் தினம் காலை, ராதாகிருஷ்ணன் மளிகைக்கடையில் இருந்தபோது, அதே தெருவைச் சேர்ந்த ராஜா என்பவர் மேற்படி மளிகைக்கடைக்கு சென்று ராதாகிருஷ்ணனிடம் பணம் கேட்டபோது, ராதாகிருஷ்ணன் பணம் இல்லை என்றதாகவும், உடனே ராஜா கடையிலிருந்த கண்ணாடி பாட்டிலை கீழே தள்ளி உடைத்து, கடையில் வைத்திருந்த பொருட்களை வீசி, கையால் தாக்கி மிரட்டி அவரிடமிருந்து பணம் ரூ.850-ஐ பறித்துக் கொண்டு கொலை மிரட்டல் விடுத்துச் சென்றதாகவும், பாதிக்கப்பட்ட ராதாகிருஷ்ணன் என்பவர் ஆர்.கே. நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஆர்.கே. நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி ராஜா (எ) கோழி ராஜா, என்பவரை கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட எதிரி ராஜா விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.



**தெற்கு ஆசிய அளவிலான கராத்தே போட்டி கோவா மாநிலம் பரிகார் ஸ்டேடியத்தில் நடந்தது. இதில் இந்தியா, நேபால், இலங்கை, பூட்டான், பங்களாதேஷ், சீனா வில் இருந்து சுமார் 300க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். தமிழ்நாடு திருவள்ளூர் மாவட்டம் மாணவர்கள் 8 தங்கப்பதக்கம் 6 வெள்ளி பதக்கம் 2 வெண்கல பதக்கம் வென்றனர். மாஸ்டர் ராஜா, மாஸ்டர் சங்கீதா மாஸ்டர் கார்த்திக் வெற்றி பெற்றவர்களை பாராட்டினர்.**



**சென்னை மதுரவாயல் வடக்குப் பகுதி, 146 வது வார்டில் வட்ட செயலாளர்ரூபன் ஏற்பாட்டில் என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி செயல் திட்ட பரப்புரை குறித்து அமைச்சர்மா.சுப்பிரமணியன்பேசினார். உடன்காரம்பாக்கம்க.கணபதிஎம்.எல்.ஏ.மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் நொளம்பூர்வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி, தொகுதி மேற்பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம், வட்ட செயலாளர்கள் எஸ்.ஜி. மாதவன், எம்.இ. ஸ்டாலின்,எம்.சி உள்ளனர்.**

# புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி சென்னையில் 19,000 போலீசார் பாதுகாப்பு

**சென்னை டிச 31-**

புத்தாண்டை கொண்டாடுவதற்கு சென்னை பெருநகர காவல் ஆணையர் உத்தரவின் பேரில் 19,000 காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்கள் மூலம் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சென்னை காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில், 2026ம் ஆண்டு புத்தாண்டு கொண்டாட்டம் எவ்வித அசம்பாவிதமும் நடக்காமல் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு சென்னை பெருநகர காவல் துறை சார்பில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது. முக்கியமாக புத்தாண்டு கொண்டாட்டத்தின் பொருட்டு கடற்கரை, வழிபாட்டு தலங்கள், சாலைகள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.சென்னை காவல் கூடுதல் ஆணையர்கள் அறிவுரையின் பேரில், காவல் இணை ஆணையர்கள் ஆலோசனையின் பேரில், காவல் துணை ஆணையர்கள் மேற்பார்வையில், உதவி ஆணையர்கள் தலைமையில், காவல் ஆய்வாளர்கள். உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவல் ஆளிநர்கள், ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்பு காவல் படை காவலர்கள் என மொத்தம் 19,000 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் மூலம் புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது பாதுகாப்பு அளிக்க சென்னை காவல் துறை விரிவான பாதுகாப்பு ஏற்பாடு செய்துள்ளது. மேலும் காவல் துறையினருக்கு உதவியாக, சுமார் 1,500 ஊர்க்காவல் படையினரும் புத்தாண்டு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு இன்று (புதன்கிழமை) இரவு 09.00 மணியிலிருந்து முக்கியமான இடங்களில் சென்னை பெருநகர காவல்துறை சார்பில் கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டு சென்னை, மயிலாப்பூர், கீழ்பாக்கம், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், அடையாறு, புனித தோமையர்மலை, பூக்கடை, வண்ணாரப்பேட்டை, புளியந்தோப்பு, அண்ணாநகர், கொளத்தூர் மற்றும் கோயம்பேடு ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 425 இடங்களில் வாகன தணிக்கை குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.மேலும், 30 சாலை பாதுகாப்பு குழுக்கள் இருசக்கர வாகனத்தில் ரோந்து சென்று பொதுமக்களுக்கு பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட, வேண்டிய உதவிகளை மேற்கொள்வார்கள். இது மட்டுமின்றி கிண்டி, அடையாறு, தரமணி, நீலாங்கரை துரைப்பாக்கம், மதுரவாயல் பைபாஸ் சாலை, மற்றும் ஜி.எஸ்.டி ரோடு போன்ற பகுதிகளில் இருசக்கர வாகன பந்தயம் (பைக் ரேஸ் ) தடுப்பு நடவடிக்கையாக 30 கண்காணிப்பு சோதனை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள 100க்கும் மேற்பட்ட முக்கிய கோயில்கள், தேவாலயங்கள், இதர வழிபாட்டுதலங்கள், பொது இடங்களில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு, இன்று மாலை முதல் நாளை வரை பொதுமக்கள் கடல் நீரில் இறங்கவோ, குளிக்கவோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால், மெரினா, சாந்தோம், எலியட்ஸ் மற்றும் நீலாங்கரை உள்ளிட்ட கடற்கரை பகுதிகளில் போலிசார் குதிரைப்படைகள் மற்றும் ஏடிவி எனப்படும் மணலில் செல்லக்கூடிய வாகனங்கள் மூலம் கண்காணித்து நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் மணல் பகுதியிலும் தற்காலிக காவல் உதவி மைய கூடாரங்கள் அமைத்து பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது. மெரினா, சாந்தோம் பகுதி மற்றும் காமராஜர் சாலையிலும் இது போன்று உதவி மைய கூடாரங்கள் அமைக்கப்படும். மேலும், முக்கிய இடங்களில் ட்ரோன் கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சில இடங்களில் மெட்ரோ ரயில் பணிகள் நடந்து வருவதால் தகுந்த மாற்றுவழி ஏற்பாடுகளை பயன்படுத்திட வேண்டும்.கடற்கரை ஒட்டிய பகுதிகளில் தமிழ்நாடு காவல் துறை, கடலோர பாதுகாப்பு குழுமம், மெரினா கடற்கரை உயிர்காக்கும் பிரிவினருடன் இணைந்து தகுந்த பாதுகாப்பு நடவடிக்கையாக, எச்சரிக்கை பதாகைகள் பொருத்தப்பட்டு கடலில் யாரும் மூழ்கிடாமல் உயிரிழப்பை தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக குதிரைப்படைகள் கடற்கரை ஓரங்களில் பாதுகாப்பிற்காக நிறுத்தப்படும். அரசால் அனுமதிக்கப்பட்ட மனமகிழ் மன்றங்கள், ஓட்டல்கள், விடுதிகளுடன் கூடிய நட்சத்திர ஓட்டல்கள் ஆகிய இடங்களில் புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்திட வேண்டும். மேலும் மது அருந்த அனுமதிக்கப்பட்ட இடங்களில் குழந்தைகள் அனுமதிக்கப்படக் கூடாது.மேலும், அவசர மருத்துவ உதவிக்கு, முக்கிய இடங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகளவு கூடும் இடங்களின் அருகில் 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மருத்துவ குழுவினருடன் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்படும். சரக காவல் அதிகாரிகள் மேற்பார்வையில் குற்றத் தடுப்பு நடவடிக்கை மற்றும் பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுத்தல் ஆகிய பணிகளுக்கு, தற்காலிக கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டும். மொபைல் கண்காணிப்பு குழு எனப்படும் குழுக்கள் அமைக்கப்பட்டு மினிலோடு ஆட்டோ போன்ற வாகனங்களில் பி.எ சிஸ்டம், ப்ளிக்கரிங் லைட் போன்றவை பொருத்தியும் மக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் வாகனங்கள் அதிகம் சேரும் இடங்களில் உபயோகிக்கப்படும்.பொது இடங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் உட்பட அனைத்து இடங்களிலும் பட்டாசுகள் வெடிக்க தடை செய்யப்பட்டுள்ளது. அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், ஒலி பெருக்கிகள் பயன்படுத்துவதற்கும் காவல்துறை மற்றும் இதர துறைகளில் அனுமதி பெற்ற பின்னரே நிகழ்ச்சி நடத்திட வேண்டும். மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. சென்னை பெருநகர காவல் துறை, பொதுமக்களுக்கு எந்தவித இடையூறுகளும் இல்லாமல் அனைத்து நிகழ்வுகளை நடத்திட, பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து சென்னை பெருநகரில் 12 காவல் மாவட்டங்களில் பொதுமக்கள் புத்தாண்டை சிறப்பாகவும், மற்றவர்களுக்கு சிரமமின்றியும், எவ்வித அசம்பாவிதமும் நிகழாமல் மகிழ்ச்சியுடன் கொண்டாட அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.மேலும், சென்னை காவல் துறையின் அறிவுரைகளை கடைபிடித்து பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் புத்தாண்டை சிறப்பாக கொண்டாடுமாறும், மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்களுடைய வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும், வழக்குப் பதிவு செய்ய நேரிட்டால் பாஸ்போர்ட், வேலை வாய்ப்பு உள்ளிட்டவைகளின் விண்ணப்பங்கள் போலீசாரால் சரிபார்ப்பு செய்யும் போது பாதிப்பு ஏற்படும் என்பதால் இளைஞர்கள் மது அருந்திவிட்டு வாகனங்கள் ஓட்டுவதை தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். எனவே, பொதுமக்கள், சென்னை காவல் துறையினருடன் ஒத்துழைப்பு நல்கி, 2026ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டினை இனிதாக வரவேற்றிட இனிய புத்தாண்டு வாழ்த்துகளுடன்'' கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

